# சக்தி பௌண்டேஷன் - தமிழ்   CCC வகுப்பு
# தான-தர்மத்தின் பலன்

---

**முக்கியக் குறிப்பு:** திருப்பூர் மாநகரில் வாழும் நண்பர் திரு.முத்துக்குமாரின் பாட்டி [அம்மாவின் அம்மா] சுமார் 88 வயதான பெரியவர் தன் கணவர் முக்காலத்தில் ப்ரவச்சனத்தில் கேட்டுச் சொன்ன "அன்னதான பலன்" என்ற கதை [சற்று இக்காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட்டது] எனச் சொல்லிய கதை இது. அவரை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்!

**சிதம்பர ஷேத்ரம்**! சிவபெருமான் ஆனந்த நடராஜராக, மெய்யுணர்வின் உருவகமாக, ஆகாசத் தத்வமாக எழுந்தருளும் தலையாய ஸ்தலம். அவ்வூரில் அக்காலத்தில் ஒரு பரம பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் உஞ்ச வ்ருத்தி [பஜனைப் பாடல்கள், நாம சங்கீர்த்தனங்கள் பாடி, வீடு வீடாகச் சென்று மக்கள் இடும் அரிசி மற்றும் உணவுப்பொருட்களைக் கொண்டு சமைத்து உண்பது, அதைக் கொண்டு அன்னதானமும் முடிந்த அளவில் செய்வது] செய்தே வாழ்ந்தார். அவரது பாடல்கள் மிகவும் ப்ரசித்தியானவை. மக்கள் பிக்ஷை இடுவதுடன் அவர் கூறும் ஆன்மீகக் கருத்துக்களையும் மிகவும் ரசித்துக் கேட்டனர். அதன் பலனாக பலர் அவருக்கு பிக்ஷை இடுவதும் உண்டு.

அன்று அவர் வீட்டில் மாத சிவராத்ரி வ்ரதம். அவர் பிக்ஷை முடிந்து வருகிறார். வீட்டில் அன்பர்கள் கூட்டம் நிறைய இருந்தது. அவர்கள் இவரது ஆன்மீக சொற்பொழிவுக்காகக் காத்துக் கொண்டு இருந்தனர். வந்தவர்களுக்கு அன்னதானம் செய்யாமல் விட்டுவிட முடியுமா?

கையில் கிடைத்த அனைத்து பொருட்களையும் அன்றைய அன்னதானத்துக்கே செலவிட்டு இவர் சிவராத்ரி பஜனையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்க, மாலையில் பள்ளி முடிந்து இவரது ஒரே மகன் மஹேஷ் வீட்டுக்குள் நுழைகிறான். கால்களைக் கழிவி விட்டு அம்மாவிடம் சென்று, "அம்மா! சிவராத்ரி ப்ரசாதமாக என்ன என்ன சமையல் செய்தாய் அடியார்களுக்கு? எனக்கு மிக்க பசி! சாதம் போடுங்கள்!" என்று வேண்டினான்.

"மஹேஷ்! மன்னித்து விடு, இன்று அடியார் கூட்டம் அதிகமானதால் அனைத்தையும் அப்பா அன்னதானம் செய்யும்படி ஆகி விட்டது, இதோ பழங்கள் உள்ளன, பசி ஆற்றிக் கொள்!" என்று அம்மா அன்புடன் அருகில் வர அவனுக்குள் பசியுடன் கலந்த கோபம் வெளிப்பட்டது.

"வர வர வீடு மடம் ஆகிறது! எனக்குப் பசிக்கும் என்று தெரியாதா? ஒரு கை சாதம் எடுத்து வைத்து இருக்க வேண்டாமோ? அப்படி என்ன கிடைத்து விடப்போகிறது இந்த அன்னதானத்தில்? நாமே பிக்ஷை எடுக்கும் போது அதில் வேறு அன்னதானப் புண்ணியமும் தேடலாமோ?" என்று அப்பாவிடம் சென்று கேட்டான் அவன். அவர் அமைதியாக சிரித்துக் கொண்டே,

"ஐயா! கோபம் வேண்டாம். உனக்கு என்று பக்கத்து வீட்டு மாமி மாலையில் நெய்தோசைகள் வார்த்துத் தருவதாக அம்மாவிடம் கூறி இருக்கிறார், இன்று அவர் வீட்டில் உனக்கு மஹேஷ்வர பூஜை [சிவனாகவே பாவித்து ஒருவருக்குச் செய்யும் மரியாதை], அவசரப் பட்டு வார்த்தைகளால் அம்மாவைக் கலக்கிவிட்டாயே!" என்றவுடன்; கடமை தவறாத தன் பெற்றோரின் தன்மை உணர்ந்து மஹேஷ் மனம் வருந்தினான்.

அவனை சமாதானம் செய்தார் அவன் தந்தை. இரவில் அனைவரும் படுத்துக் கொண்டனர். தினமும் அவன் தூங்கும் முன் கதைகள் சொல்வது அவரது வழக்கம். அன்றும் அவர் வாயைத் திறந்தார்...

"உன்னைப் போல ஒரு சிறுவன் வீட்டில் கோபித்துக் கொண்டு எங்கோ கால் போனபடி போனான், கடைசியில் ஒரு காட்டுக்குள் சென்று வழி தெரியாமல் முழித்தான். இரவு வர வர அவன் அழ ஆரம்பித்தான், காட்டுக்குள் ஒரே சத்தம், ஆம் விலங்குகள் இரவில் சத்தம் போடுமே!

அப்போது பார்த்து ஒரு வேடனும் அவன் மனைவியும் அவ்விடத்தைக் கடக்க நேரிட்டது. இவனைப் பார்த்த வேடன், "ஹே! தம்பீ! வழி மாறி காட்டுக்குள் வந்துட்டீயா? வா என்னோட, இன்று ராத்ரி உனக்கு நான் பாதுகாப்பு தரேன், காலைல உன்னை உன் ஊருக்குள் கொண்டு விடறேன்!" என்று அன்புடன் அழைத்தான்.இது அவன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அவள் எரிச்சலுடன் அவனைத் தடுத்தாள். அவன் கேட்பதாக இல்லை. கடைசியில் மூவரும் வேடனின் பரண் வீட்டுக்கு [wood house upon the tree] வந்தனர். பரண் மீது மிகச் சிறிய இடமே இருந்தது.

"ரெண்டு பேர் படுக்கவே எடம் இல்ல, இதுல இந்தப் பையன் வேறயா?" என்று சத்தம் போட்டாள்.

"பரவாயில்ல, நீ படு அவனும் படுக்கட்டும், நான் அவன் பக்கத்துல உட்கார்ந்தே தூங்கிக்கறேன்!" என்றான் வேடன்.

”என்னவோ பண்ணு, சரி சரி இந்த தினை மாவையும் தேனையும் சாப்பிடு!” என்று இரவு உணவைத் தருகிறாள் வேடிச்சி.

”ஏய்! பையனுக்கும் கொஞ்சம் கொடு!”

”போதும் கரிவனம், அன்பு, விருந்தோம்பல்!” என்று கடிந்து கொண்டே அவள் படுத்து விடுகிறாள்.

பசியால் வாடும் பையனுக்குத் தன் உணவை அப்படியே தருகிறான் வேடன், பின் அவன் உட்கார்ந்து கொள்ள, பையன் தூங்கினான்.

பையனின் வரவைத் தாங்கிக் கொள்ள முடியாத வேடனின் மனைவி ஆத்திரத்தில் அடிக்கடி பையனை உதைத்தாள். அப்படி ஒரு முறை உதைத்த போது கால் பட்டு வேடன் கீழே விழ, இரவில் புலி ஒன்று சரியாக அவன் மீது பாய்ந்து அவனைக் குதறிச் சாகடித்து விட்டது. தன் தவற்றை உணராத அவன் மனைவி இப்பையனை அடித்து விரட்டினாள். எப்படியோ அவன் ஊர் போய்ச் சேர்ந்து தன்னால் உயிர்விட்ட வேடனுக்காக தினமும் சிவன் கோயிலை வலம் வந்தான். காலம் சென்றது.

பையன் வாலிபன் ஆகிக் கல்யாணம் ஆகி வாழத் தொடங்கினான்.அரசனின் அமைச்சரும் ஆனான். பல காலம் குழந்தை இல்லாமல் வருந்தினான். பின்னர் தன் குலகுருவின் அறிவுரைப் படி சிதம்பரம் சேர்ந்து ஒரு மண்டலம் தனக்கு ஒரு உன்னத வாரிசு வேண்டி மனைவியுடன் வ்ரதம் இருக்கக் குழந்தையும் பிறந்தது.

குழந்தையின் ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர் அதன் பூர்வ ஜென்மத்தைப் பார்த்து வியந்தார். அக்குழந்தை தான் வேடன். தனக்கு என எண்ணாமல் தன் உணவை இவனுக்கு ஈந்து, உயிர்விட்ட அவன் ஆத்மா இவன் மகனாகவே பிறந்து விட்டது. சீரும் சிறப்புமாக வாழ்ந்தான் அவன் அக்குடும்பத்தில்.

சுயநலத்துடன் வாழ்ந்து தன் கணவனின் சாவுக்கே காரணம் ஆன வேடிச்சி, ஏதோ பரணில் இரவு சற்று இடம் தந்த புண்யத்தால் சிதம்பர ஸ்தலத்தில் வெளிப்புறத்தில் சாக்கடையில் வாழும் ஒரு பெரிய பன்றியின் குட்டிகளில் ஒன்றாகப் பிறந்து பசியால் தாயின் பால் கிடைக்காமல் கத்திக் கொண்டு இருந்தாள்!

இது தான் அன்னதானம் மற்றும் எந்த ஒரு தர்மத்தின் பலன் அப்பா!” என்று கூறிய தந்தையை உடனே எழுந்து நமஸ்காரம் செய்தான் மஹேஷ். மேலும் அவரது அன்னதானத்தைப் பழித்த பாவம் போக அடுத்த நாள் அவனும் உஞ்ச வ்ருத்திக்குச் சென்றான்.

ஓம் நம சிவாய!